## கரூர் சம்பவம்: காவல்துறையின் அறிவுரையை ஏற்க மறுத்தது ஏன்?

# அரசு மீது பழிபோட்டு திசை திருப்ப முயற்சிப்பதை மக்கள் நம்பமாட்டார்கள்!

## உண்மைச் சம்பவங்களை விளக்கி முன்னாள் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி பேட்டி!

**கரூர், அக். 2 -**

**“காவல்துறையினரின் அறிவுரையைக் கேட்காமல் நடந்துவிட்டு அரசு மீது பழிபோடுவதா?” என்று கரூர் சம்பவம் குறித்து முன்னாள் அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கரூர் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் செய்தியாளர்களுக்கு கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நேற்று அளித்த பேட்டி வருமாறு:

கரூர் மாவட்டத்தில் இது போன்ற துயர சம்பவம் நடந்ததில்லை. இனி வரக்கூடிய நாட்களில் இது போன்ற ஒரு துயர சம்பவம் தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறாத அளவிற்கு அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தில் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். கடந்த மூன்று நாட்களாக இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை செய்வதையும் இல்லங்களுக்குச் சென்று ஆறுதல் சொல்வதையும் தேவையான ஏற்பாடுகளை செய்வதிலும் எங்களுடைய முழு கவனம் அமைந்திருந்தன. முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கரூர் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உதவி செய்த அனைத்துக் கட்சியினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, தேவையான அனைத்து உதவிகளையும் அவர்களுக்கு முழுமையாக செய்து கொடுக்கப்பட்டது. 116 பேர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதன் பிறகு இறப்பு எண்ணிக்கை கூடிய நிலையில் 108 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை முடிந்து வீடு திரும்பி இருக்கிறார்கள். இப்போது ஐந்து பேர் கரூரிலும், இரண்டு பேர் மதுரை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத மிகவும் மோசமான துயர சம்பவமாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுபோன்ற துயர சம்பவம் நடைபெறக் கூடாது. கட்சியை பார்க்காமல் இயக்கங்களை பார்க்காமல் அனைவரும் ஒன்று சேர்ந்து மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ததாக அமைந்திருக்கிறது. இனி எந்த காலத்திலும் எந்த சூழ்நிலையிலும் எந்த மாவட்டத்திலும் தமிழ்நாட்டில் நடைபெறக்கூடாது. நான் இதை அரசியலாக பார்க்க விரும்பவில்லை. 41 பேர் இறந்தவர்களில் 37 பேர் கரூரைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் நேரடி தொடர்பு வைத்திருக்கிறோம். லைட்ஹவுஸ் கார்னர் என்ற இடத்தை கேட்டார்கள். அதில் எவ்வளவு பேர் நிற்க முடியும். உழவர் சந்தை இடம் கேட்டார்கள் எவ்வளவு பேர் நிற்க முடியும். பத்திரிகையாளர்களுக்கு நன்றாக தெரியும். வேலுச்சாமிபுரத்தில் கூட்டம் நடைபெற்றது. அதிக நபர்கள் நிற்கலாம். பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையே இல்லாமல் சிரமம் இல்லாமல் இருக்கும் இடம் கொடுக்கப்பட்டது. எவ்வளவு கூட்டம் வருதோ அதற்கு ஏற்ப இடத்தை தேர்வு செய்ய வேண்டியது அரசியல் கட்சியினுடைய கடமை.

### முப்பெரும் விழாவில் அனைத்து வசதிகளும் செய்திருந்தோம்!

கரூரில் நாங்கள் முப்பெரும் விழா நடத்தினோம். நீங்கள் எல்லோரும் வந்தீர்கள் எங்களுடைய தலைவர் அவர்கள் வந்து சிறப்புரையாற்றினார்கள். 2 லட்சம் பேர் எதிர்பார்த்தோம். இரண்டரை லட்சம் பேர் வந்தார்கள். தனியார் இடத்தை தேர்வு செய்து அதற்கு ஏற்ப வாகனம் நிறுத்தும் இடம் ஒதுக்கி நடத்தினோம். அனுமதி கேட்கும் போது சொல்வதை வைத்து காவல்துறையினர் தீர்மானித்து அனுமதி கொடுக்கிறார்கள். முப்பெரும் விழாவில் குடிநீர் பாட்டில்கள், ஸ்னாக்ஸ் கொடுத்தோம். அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தது.

தவெக கூட்டம் நடந்த இடத்தில் ஏராளமான செருப்புகள் கிடந்தன. ஆனால் காலி குடிநீர் பாட்டில்கள் இல்லை. வருபவர்களுக்குத் தேவையான பிஸ்கட் , குடிநீர் பாட்டில் கொடுக்கவில்லை. குறையாக சொல்லவில்லை. அவர்கள் அந்த இடத்தில் அதை செய்திருக்க வேண்டும். 12 மணிக்கு கூட்டம் என எனக் கூறியதால் 10 மணி முதல் கூட்டம் கூட ஆரம்பித்து விட்டனர். அன்று சனிக்கிழமை கரூரில் சம்பள நாள் வார சம்பளம் வாங்கிவிட்டு வருபவர்கள் வீடு திரும்புவார்கள். இதையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். கேட்ட இடத்தை கொடுக்கவில்லை என அரசியலாக பேசுகின்றனர்.

ஆங்கில, தமிழ் தொலைக்காட்சிகள் என எல்லா தொலைக்காட்சிகளும் நேரடி ஒளிபரப்பு செய்தன. சமூக வலைதளங்களும் இதை செய்தன. அரசியல் கருத்துக்களுக்காக பேசாமல் 41பேர் இறப்பு சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வு. யாரிடம் தவறு இருக்கிறது என சொல்ல வேண்டிய கடமை பத்திரிகை தொலைக்காட்சிகளுக்கு இருக்கிறது. அனைவரும் லைவ் செய்யும் போது ஜெனரேட்டர் ரூமில் சென்று யார் ஆப் செய்தாலும் அது தெரிந்து இருக்கும். ஐந்து பேரோ 10 பேரோ ஒரு ஒரு அசாதாரண சூழ்நிலையை உருவாக்கினால் தெரிந்திருக்கும். அப்படி உருவாக்க முடியுமா?. ஆனால் அப்படி ஒரு காட்சியை எந்த ஊடகமும் எடுத்துக் கட்டவில்லை

### தண்ணீர் பாட்டில்களை வீசுகிறார்கள்!

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே தண்ணீர் என கேட்கிறார்கள். தண்ணீர் பாட்டில்கள் வேனில் இருந்து வீசப்படுகிறது . தண்ணீர் கேட்கும் போது தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். ஒருவர் போய் சொல்லி தான் தண்ணீர்பாட்டிலை வீசுகிறார்கள். கவனத்தை ஈர்ப்பதற்காக கூட செருப்பை வீசி இருக்கலாம்.

### காவல் துறையினர் கூறியும் கேட்கவில்லை!

கூட்டம் அதிகமாக இருக்கிறது என 500 மீட்டருக்கு முன்னால் காவல்துறையினர் எடுத்துக் கூறியும் கேட்கவில்லை. அந்த இடத்தில் பேசவும் இல்லை. அந்த இடத்திலேயே பேசி இருந்தால் கூட்டம் கலைந்து இருக்கும். ஆனால் குறிப்பிட்ட இடத்தில் தான் பேசுவோம் என பிரச்சார வாகனத்தை அங்கு கொண்டு போய் நிறுத்தினார்கள். காவல்துறையினர் சொல்லியதை பின்பற்றி இருந்தால் இந்த பாதிப்பு ஏற்பட்டு இருக்காது. இதையெல்லாம் செய்யாமல் இந்த ஊரில் மட்டும் ஏன் இப்படி நடந்தது என்று கேட்கிறார்.

இது கட்டுக்கடங்காத கூட்டம் அல்ல. கட்டுப்பாடற்ற கூட்டம் என்பதை அக்கட்சியினர் உணரவில்லை.

### கட்டுப்பாடற்ற கூட்டம்!

சம்பவம் நடந்த பிறகு இது வரை அந்த கட்சித் தலைவரோ இரண்டாம் கட்ட தலைவர்களோ எதுவும் பேசவில்லை. போலீசார் சொன்ன இடத்தில் நின்று பேசுவதற்கு அவருக்கு என்ன சிரமம் இருக்கிறது ஏன் அதை மீறினார். ஒவ்வொரு ஊரிலும் என்னென்ன நடந்தது என்பது அவருக்கு தெரியவில்லை காவல்துறையினர் தெளிவாக விளக்கமளித்திருக்கிறார்கள்.

அவர் என்னைப் பற்றி பேசுவதற்கு முன்பே செருப்பு விழுந்தது நெரிசல் ஏற்பட்டது என்பது தொலைக்காட்சியில் தெளிவாகத் தெரிகிறது. அவர் ஆரம்பத்தில் போலீசாரை பாராட்டி இருக்கிறார்.

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே கூட்டத்தில் நெரிசல் ஏற்படுகிறது ஆம்புலன்ஸ் வருகிறது. காவல்துறையினர் கூறியதை அவர்கள் கேட்கவில்லை. கேட்டிருந்தால் இதுபோன்று நடந்திருக்காது. காவல்துறையின் எந்த அறிவுரையும் அவர்கள் பின்பற்ற வில்லை. தான் செய்த தவறுகளை தமிழ்நாடு அரசின் மீது திசை திருப்ப பார்க்கிறார் யாராக இருந்தாலும் செய்த தவறை ஒத்துக் கொள்ள வேண்டும் திசை திருப்பும் வேலையை ஒருபோதும் எடுபடாது.

பா.ஜ.க. உண்மை கண்டறியும் குழு குறித்து கேட்டீர்கள்.. அவர்கள் கருத்துக்களை ஆணையத்திடம் கூறட்டும். மணிப்பூருக்கு பா.ஜ.க. உண்மை கண்டறியும் குழு செல்லாதது ஏன்?

கள்ளக்குறிச்சி பாதிப்பிற்கு முதல்வர் ஏன் போகவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதாக கூறுகிறீர்கள். துணை முதலமைச்சர் சென்றிருக்கிறார்கள். ஆறுதல் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இந்தியாவில் மட்டுமல்ல. எந்த நாட்டில் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் தமிழ்நாடு அரசு முன்னணியில் நின்று உதவி செய்து வருகிறது.

சில அரசியல் இயக்கங்கள் தவறுதலாக அரசின் மீது சொல்லும் குற்றச்சாட்டுகளை மட்டும் கேட்கிறீர்கள். அரசை பாராட்டி நிறைய பேர் பதிவிட்டு இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் எந்த குற்றச்சாட்டுகளையும் கூறவில்லை. சமூக வலைதளத்தில் கத்தியால் கிழித்ததாக பரப்புகிறார்கள். அவர்கள் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். தனது கணவர் கைது செய்யப்பட்டவுடன் இது போன்ற கருத்தை தவெக. மாவட்டச் செயலாளர் மனைவி கூறுகிறார். அதற்கு முன்பே ஏன் அவர் இதைக் கூறவில்லை. இது போன்ற ஆவணங்களை விசாரணை கமிஷனிடம் அளிக்கலாம். ஆனால் அரசியல் ரீதியாக தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியில் தொடர்ந்து கருத்துக்களை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

### பத்து ரூபாய் பழனிசாமி!

எடப்பாடி பழனிச்சாமி பத்து ரூபாய் பழனிச்சாமி என்று கூறுவதை தவெக. தலைவரும் கூறுகிறார். அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டுகளை கூறுகின்றனர் . நான் இந்த துறையில் இல்லை இருந்தாலும் கூறுகிறேன். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, இப்போது வந்த அரசியல் கட்சி தலைவராக இருந்தாலும் சரி, அ.தி.மு.க. ஆட்சியை விட கழக ஆட்சியில் கூடுதலாக பேசுகிறார்கள். விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. என் மீது இப்படி குற்றச்சாட்டை கூறுகிறார்.

அ.தி.மு.க. ஆட்சியை விட கழக ஆட்சியில் கூடுதல் தொகை வசூல் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அபராத வசூலிக்கப்பட்டிருக்கிறது. கூடுதல் தொகை ஒருவருக்கு செல்கிறது என்று சொன்னால் ஐந்து ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் கூடுதல் தொகை எடப்பாடி பழனிச்சாமிக்குச் சென்று இருக்க வேண்டும். எடப்பாடி பழனிச்சாமி பத்து ரூபாய் பழனிச்சாமி என்று அழைக்க வேண்டும். அதிமுக ஆட்சியை விட இரண்டு மடங்கு அதிகமாக புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### கரூர் மக்களுக்கு என்னைப் பற்றித் தெரியும்!

அரசியலுக்காக அரசின் மீது புழுதி வாரி தூற்ற வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு எதிர்க்கட்சித் தலைவர் இது போன்ற முன்னெடுப்புகளை எடுக்கிறார். என்னைப் பற்றி தொகுதி மக்களுக்கும் மாவட்ட மக்களுக்கும் தெரியும் . எனது தலைவருக்கும் எனது குணங்கள் என்ன செயல்பாடுகள் என்ன என்பது தெரியும். இவர் எனக்கு சான்றிதழ் கொடுக்க வேண்டியது இல்லை. பொதுவெளியில் உண்மைக்கு மாறாக தவறான ஒரு செய்தியை அவதூறு பரப்புவது. அதை வைத்துக் கொண்டு இன்னொரு அரசியல் கட்சித் தலைவர் ஒரு பாட்டு பாடுவது பாட்டு பாடியவருக்கு கடந்த ஆட்சியில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது இந்த ஆட்சியில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியுமா?

பத்து நிமிடம் பேசிவிட்டு இது போன்ற ஒரு பேரிழப்புக்கு காரணமாக அமைந்துள்ளீர்கள்.

டாஸ்மாக் குறித்து இ.டி பதிவு செய்த வழக்கு 41. அதில் 34 வழக்கு அ.தி.மு.க. மீது உள்ளது. பாட்டு பாடியவருக்கு இது பற்றி தெரியுமா?. ஏழு மணி நேரம் தாமதமாக வந்துவிட்டு தொடர்ந்து தவறுகளை செய்துவிட்டு காவல் துறையினர் சொன்ன அறிவுரைகளையும் கேட்காமல் அடுத்தவர்கள் மீது பழி போடுவதை மக்கள் நம்ப மாட்டார்கள்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேட்டியளித்தார்.



---

## “பாடியநல்லூர் பேருந்து நிலையம்” அமைப்பதற்கான பணிகள்!

*சென்னை, அக்.2-*

*முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி சிஎம்டிஏ சார்பில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் 11 மாநகர போக்குவரத்து கழக பேருந்து நிலையங்கலான திரு.வி.க. நகர், பெரியார் நகர், தண்டையார்பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர், அம்பத்தூர், திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல், வள்ளலார் நகர் மற்றும் பாடியநல்லூர் ஆகிய பேருந்து நிலையங்கள் அமைக்கதிட்டமிடப்பட்டு, அதில் அண்மையில் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் ஆகிய 2 பேருந்து நிலையங்கள் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 25.08.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. மேலும், தண்டையார்பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர் மற்றும் அம்பத்தூர் ஆகிய பேருந்து நிலையங்கள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்படவுள்ளது. திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல் மற்றும் வள்ளலார் நகர் ஆகிய பேருந்து நிலையங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (30.9.2025) மாதவரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்ட த்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் “பாடியநல்லூர் பேருந்து நிலையம்” அமைப்பதற்கான பணிகளை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.*

---

## விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று(2.10.2025–வியாழக் கிழமை) விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல் **4.10.2025-சனிக்கிழமை** அன்று வெளிவரும்.

**- நிர்வாகி**

---





நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றம் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அறிவியலறிஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மற்றும் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் ஆகியோர் 24 அறிவியலறிஞர்களுக்கு விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ.50 ஆயிரத்திற்கான காசோலைகளை வழங்கி பாராட்டினர்.



தருமபுரி மாவட்டம் அடிலம் ஊராட்சி பகுதியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமினை மாவட்ட ஆட்சியர் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்து அன்றைய தினம் பெறப்பட்ட மனுக்கள் மீது அன்றே நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்ட மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் எம்.வீ.டி.கோபால், அடிலம்.அன்பழகன், பாலக்கோடு தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், ஏ.வி.குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.